

# விநாயகர்

புலவர் க. சுகுமாரன்

விநாயகருக்குத் தேங்காய் உடைப்பது எதற்காக? விக்கினேசுவரர் தம் அப்பாவான ஈசுவரனைப் பார்த்து, "உன் சிரசையே எனக்கு பலிகொடு" என்று கேட்டு விட்டாராம். எல்லாவற்றையும் காட்டிலும் உயர்ந்தது எதுவோ அதைத் தியாகம் செய்தால்தான் மகாகணபதிக்குப் ப்ரீதி ஏற்படுகிறது. அவ்வளவு பெரிய தியாகம் செய்வதற்குத் தயார் என்ற அறிகுறியாகத் தேங்காயைச் சிதறடித்து அந்தக் காயை அவருக்கு நாம் அர்ப்பணம் செய்யும் படியாக ஈசுவரன் அனுக்கிரகித்திருக்கிறான்.

கணபதியைக் காட்டிலும் சரீரத்தில் பருமனான ஸ்வாமி வேறு யாரும் இல்லை. சிரசு யானையின் தலை. பெரிய வயிறு. பெரிய உடம்பு. அவருக்கு 'ஸ்தூல காயர்' என்று ஒரு பெயர். மலைபோல் இருக்கிறார். அவர் குழந்தை! குழந்தைக்கு எது அழகு? குழந்தை என்றால் அந்தப் பருவத்தில் நிறைய சாப்பிட வேண்டும். உடம்பு கொஞ்சம்கூட இளைக்கக் கூடாது. ஒரு சந்நியாசி நிறைய சாப்பிட்டுக் கொண்டு பெரிய சரீரியாக இருந்தால் அது அவருக்கு அழகல்ல. வயதாகிவிட்டால் ராத்திரி உபவாசம் இருப்பார்கள். குழந்தை அப்படி இருப்பது அழகா? குழந்தை என்றால் தொந்தியும் தொப்பையுமாகக் கொழுகொழுவென்று இருந்தால்தான் அழகு. குழந்தைகள் நல்ல புஷ்டியாக இருக்க வேண்டும் என்பதை இந்தக் குழந்தைச் சாமியே காட்டிக் கொண்டிருக்கிறார்.

இவரோ யானை மாதிரி இருக்கிறார். அதற்கு நேர் விரோதமாக சின்னஞ்சிறு உருவை உடையது மூஞ்சூறு. இதை அவர் தம் வாகனமாக வைத்துக் கொண்டிருக்கிறார். மற்ற ஸ்வாமிகளுக்காவது ஒரு மாடு, ஒரு குதிரை, ஒரு